பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

10 12 2024 6 30
செவ்வாய்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. விவசாயத்திற்குத் தேவையான மின்னணு தகவல் கட்டமைப்பை நிறுவ இரண்டாயிரத்து 817 கோடி ரூபாய் அனுமதிக்கப் பட்டிருப்பதாக மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
2. திருவண்ணாமலை மாவட்டத்தில் பெஞ்சல் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழுவினர் இன்று ஆய்வு செய்தனர்.
3. மாநிலத்தில் நடப்பு ஆண்டில் ஆயிரம் தடுப்பு அணைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.
4. தமிழக சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் இன்று தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.
5. வங்கக்கடலில் வலுப்பெற்றுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் நான்கு நாட்களுக்கு மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

பயிர் சாகுபடி, தட்பவெப்ப நிலை மற்றும் நீர் ஆதாரங்கள் குறித்த மின்னணு தகவல் திரட்டை மின்னணு வேளாண் இயக்க கட்டமைப்பில் கொண்டு வருவதற்கு இரண்டாயிரத்து 817 கோடி ரூபாயை மத்திய அரசு அனுமதித்திருப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அவர் அளித்த பதிலில், அனைத்து மாநிலங்களுடன் இணைந்து மின்னணு பொது தகவல் கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற பின் முதல் 100 நாட்களில் விவசாயிகள் நலனுக்கான பல திட்டங்களை கொண்டு வந்துள்ளதாகக் கூறினார்.

கிராமப்புற வேளாண் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் ஊரகப் பகுதிகளில் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் தொடங்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வேளாண் துறையை பங்கு வர்த்தக கட்டமைப்பில் பதிவு செய்து அக்ரி **sure** ,என்ற வேளாண் நிதியம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

[]<<<>>>[]

பருவநிலை மாற்றங்களை தாங்கி வளரும் பயிர்கள் 310 மாவட்டங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மக்களவையில் இது தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், நாடெங்கிலும் உள்ள 28 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 448 இடங்கள் தெரிவு செய்யப்பட்டு பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான புதிய தொழில்நுட்ப கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெஞ்சல் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழுவினர் இன்று பார்வையிட்டனர்.

மத்திய அரசின் உயரதிகாரிகள் திரு சரவணன், திரு தனபாலன் குமரன், திரு கே எம் பாலாஜி ஆகியோர் கொண்ட குழுவினர் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - ரவிச்சந்திரன் ) -40---- செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தில் பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை கண்டறிந்து அவர்களுக்கான உதவியை அளிக்க வேண்டுமென்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை இன்று புதுதில்லியில் சந்தித்து கேட்டுக் கொண்டார்.,

மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்ஜன் சிங்கையும் சந்தித்த பாதிக்கப்பட்ட 69 லட்சம் குடும்பங்களுக்குத் தேவையான பேரிடர் நிவாரண உதவிகளை வழங்கவும் அவர் கோரிக்கை வைத்தார்.

தமிழக பிஜேபி-யின் மூத்த தலைவர்களும் மத்திய இணை அமைச்சருடன் சென்றிருந்தனர்.

[]<<<>>>[]

மாநிலத்தில் நடப்பு ஆண்டில் ஆயிரம் தடுப்பு அணைகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு துரைமுருகன் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், முதல்கட்டமாக 500 தடுப்பணைகள் கட்டப்படும் என்று கூறினார்.

மாநிலத்தில் உள்ள வாய்க்கால்கள் உள்ளிட்ட நீர்நிலைகளை தூர்வாருவதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

முல்லைப்பெரியாறு அணை பாதுகாப்பு குறித்து கேரள முதலமைச்சரை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணப்படும் என்றும் அவர் கூறினார்.

முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கேரளா செல்லும்போது தாமும் அவருடன் சென்று இப்பிரச்சினை குறித்து கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயனுடன் பேச உள்ளதாகவும் திரு துரைமுருகன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஜி எஸ் டி வரிப் பகிர்வில் தமிழகத்திற்கு கூடுதல் நிதி வழங்க வேண்டுமென்று மாநில நிதி அமைச்சர் திரு தங்கம் தென்னரசு மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்ட துணை மானியக் கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், நிதி மேலாண்மையில் மாநில அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாகக் கூறினார்.

கடன் சுமையை குறைத்து நிதி மேலாண்மையை மாநில அரசு சிறப்பாக கடைபிடிக்கும் என்றும் திரு தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

அமைச்சரின் பதிலுரைக்குப் பின் துணை மானியக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

அவர் கொண்டு வந்த நிதி ஒதுக்க சட்ட முன்வடிவும் நிறைவேறியது.

**[]<<<>>>[]**

தமிழ் தாத்தா உ வே சாமிநாத ஐயர் பிறந்த நாள், தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று அஇஅதிமுக உறுப்பினர் திரு கே பி முனுசாமி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த முதலமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

**[]<<<>>>[]**

தமிழக சட்டப்பேரவையின் இரண்டு நாள் கூட்டம் இன்று மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

இதற்கான அறிவிப்பை பேரவைத் தலைவர் திரு அப்பாவு வெளியிட்டார்.

பேரவையில் இன்று உள்ளாட்சி அமைப்புகளுக்கு கேளிக்கை வரி விதிப்பது தொடர்பாக அனுமதி வழங்குவது குறித்த சட்டத்திருத்த மசோதா உள்ளிட்ட 19 மசோதாக்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்பட்டன.

**[]<<<>>>[]**

தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் அநேக இடங்களில் அடுத்த நான்கு நாட்களுக்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், டெல்டா மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்திற்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் கூறினார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) -58-- செகண்ட்*

தமிழக கடலோரப் பகுதிகளில் வரும் 13-ஆம் தேதி வரை 55 கிலோமீட்டர் வேகம் வரை எட்டக்கூடிய சூறைக்காற்று வீசக்கூடும் என்றும், மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்படுவததாகவும் அவர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் கார்த்திகை தீபத் திருவிழா தேரோட்டம் இன்று விமரிசையாக நடைபெற்று வருகிறது.

இன்று காலை விநாயகர் தேரோட்டமும், சுப்ரமணியர் தேரோட்டமும் நடைபெற்றது.,

மகாரதம் எனும் பெரிய தேரோட்டத்தை சட்டப்பேரவைத் துணைத்தலைவர் திரு கு பிச்சாண்டி, மாவட்ட ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன் ஆகியோர் வடம்பிடித்து தொடங்கி வைத்தனர்.

இன்று இரவு அம்மன் தேரோட்டமும், சண்டிகேஸ்வரர் தேரோட்டமும் நடைபெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

மூதறிஞர் ராஜாஜி-யின் 146-வது பிறந்த நாளையொட்டி கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே தொரப்பள்ளி கிராமத்தில் உள்ள அவரது நினைவு இல்லத்தில் உள்ள உருவச்சிலைக்கு ஆட்சியர் திருமதி சரயு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

ராஜாஜியின் கல்வி, அரசியல், சேவைப் பணிகள் குறித்து அமைக்கப்பட்டுள்ள புகைப்படங்களையும் அவர் பார்வையிட்டார்.

ஏராளமான பொதுமக்களும், மாணவ மாணவியரும் ராஜாஜியின் உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே ரங்கப்பனூர் ஊராட்சியில் மத்திய அரசின் ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுமான பணியினை ஆட்சியர் திரு எம் எஸ் பிரசாந்த் இன்று ஆய்வு செய்தார்.

**[]<<<>>>[]**

தேனி மாவட்டத்தில் வைகை ஆற்றில் கழிவுநீர் கலக்கும் இடங்களை ஆட்சியர் திருமதி ஷஜீவனா நேரில் ஆய்வு செய்து, தண்ணீர் மாசு அடையாமல் பாதுகாக்க மாற்று ஏற்பாடுகளை செய்யுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**[]<<<>>>[]**

பெரம்பலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வரும் வெள்ளிக்கிழமை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது.

**[]<<<>>>[]**

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சதுரகிரி கோவிலுக்குச் பக்தர்கள் செல்ல வரும் 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரை மாவட்ட நிர்வாகமும், வனத்துறையும் அனுமதி அளித்துள்ளது.

[]<<<>>>[]

சிவகங்கை மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு மானியத்துடன் பவர் டில்லர், களை எடுக்கும் கருவி வழங்கப்பட்டு வருவதாக ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம் கோகிலாபுரம் கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நாளை மக்கள் தொடர்பு திட்ட முகாம் நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

ஒடிஸா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் தகுதி சுற்றுப் போட்டியில் இந்தியாவின் மானவ் சௌத்திரி — ஐக்கிய அரபு எமிரேட்ஸின் முகமது முனாவரை வென்று அடுத்தச் சுற்றுக்கு முன்னேறினார்.

இந்தியாவின் அபினவ் தாக்கூர், ப்ரணாய் ஷெட்டிகர், கோவிந்த் கிருஷ்ணா ஆகியோரும் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

[]<<<>>>[]

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் குஜராத் - ஜெய்ப்பூரையும், பெங்கால் — பெங்களூரு அணியையும் எதிர்கொள்கின்றன.

[]<<<>>>[]